ஒரு முன்னோடி இயந்திரமென்று சொன்னேன். இது நாள் ஒன்றுக்கு பத்து கிலோ பூக்களிலிருந்து தான் தைலம் எடுக்கக்கூடியது. இன்னும் சோதனையில் இருக்கிறது.

Pesticides

* 209 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken to assess the annual requirement of pesticides for the State and to procure them without delay?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: விவர அறிக்கை * ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

* 210. வினா—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1973–74-ல் விவசாய விநியோக டெப்போக்களில் விற்கப் பட்ட பூச்சி மருந்து எந்தெந்த நிறுவனங்களிலிருந்து வாங்கப் பட்டது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: விவரப்பட்டியல் @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். வடிவேல்: பூச்சிக்கொல்லி மருந்துகளை வயலில் அடித்தாலும் கூட பூச்சிகள் சாவதில்லை. ஆகவே, உறுதியான நல்ல பூச்சி மருந்துகளை அரசாங்கமே டெப்போக்கள் வைத்துக் கொடுக்க முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு உறுப்பினர் சொன்ன ஆலோசனை பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கு. இராசமாணிக்கம்: தஞ்சை மாவட்டத்திற்குத் தேவை யான அளவுக்கு பூச்சிகொல்லி மருந்துகள் கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல, விலைகளும் அதிகமாக இருக்கின்றன. தஞ்சை மாவட்டத் திலேயே பூச்சிகொல்லி மருந்து தொழிற்சாலை நிறுவ அரசுக்கு உத்தேசம் உண்டா?

---

* 125–127-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@ 127–131-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.